அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் :- 02/2016

எனது இலக்கம் : EST-6/LEAVE/03/3134

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2016.05.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்கள தலைவர்கள்

**ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியினை அடைந்து கொள்ளும் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அரசாங்க அலுவலர்களுக்கு காணப்படும் கடமை விடுமுறை உரிமை**

அரச கரும மொழிக் கொள்கையினை செயற்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கு இணங்க 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறன்களை அல்லது அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சகல அலுவலர்களும் அரசாங்க சேவைக்கு இணைக்கப்பட்டு 05 வருடங்களினுள் தான் சேவையினுள் இணைக்கப்பட்ட அரசாங்க மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பாக தனது பதவிக்கு உரித்துடையதாக குறித்துரைக்கப்பட்ட மொழித் தேர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப திறமையினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

02. அரசாங்க கொள்கையொன்றினை இவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள மொழித் தேர்ச்சிக்காக அரச கரும மொழிகள் திணைக்களம் அல்லது பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு அரசாங்க அலுவலர்களுக்கு ஒரு சில அரசாங்க நிறுவனங்களினால் கடமை விடுமுறை அளிக்கப்படுவதில்லை என தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

03. அதனால் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் 01/2014 இற்கு இணங்க அரசமொழித் தேர்ச்சியினை பெற்றுக் கொள்வதற்காக நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு முதன் முறையாக தோற்றுவதற்கு மாத்திரம் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க அலுவலர்களுக்கு கடமை விடுமுறைக்கான அனுமதியினை வழங்குதல் வேண்டும்.

ஒப்பம்/. ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு